## 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களத்தின் வெகுமதிகள் மற்றும் ஊக்குவிப்பு நிதியத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்க தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகார சட்டத்திலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து நிதியத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்று உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அதனுடன் சம்பந்தப்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கல்லூரியின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்தல் மற்றும் முகாமைத்துவமானது கல்லூரியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் எனபவற்றிற்கு முகாமைத்துவத்தும் பொறுப்பாக உள்ளது.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு சபை அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு)

---

மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய அனைத்து பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டை பெற்றுக்கொள்வது எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாரள அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோளாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ் கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மெற்கொள்ளப்படும் பொருளதார தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்கு செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காயிவின் பகுதியொன்றாக, கணக்காயிவின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீட்டு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளுதல் மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றை கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிறுவகம் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்றிறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கல்லூரிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குற்ப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருன்மையான நிச்சியமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்கு வந்தால், அல்லது எனது

அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணப்பாய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாக காணப்டுகின்றன. எவ்வாராயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கல்லூரியின் தொடர்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதினை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பினிவரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- நிதியத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள், மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிமைக்கப்பட்ருபடபதனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக செய்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- நிதியத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கல்லூரி இணங்கியிருந்ததா என்பதும்,

- அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்மான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்க பூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் தொடர்பான உள்ளக கட்டுப்பாடு

கொடுக்கல் வாங்கல்களின் முகாமைத்துவத்தின் பொதுவான மற்றும் திட்டவட்டமான அதிகாரத்துடன் நடைமுறைப்படுத்தல், உரிய நிதியிடல் நியமங்களுக்கிணங்க நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு தேவையான வகையில் கொடுக்கல் வாங்கல்களை பதிவு செய்தல் மற்றும் சொத்துக்களுக்கான கணக்கறிக்கையை பேணுதல், முகாமைத்துவத்தின் பொதுவான மற்றும் குறிப்பான அதிகாரத்துடன் மாத்திரம் சொத்துக்களுக்கு பிரவேசித்தல், பதிவு செய்யப்பட்ட சொத்துக்களுக்கான கணகளித்தகைமை பேணப்பட்டு சொத்துக்களுடன் நியாயமான காலப்பகுதியினுள் ஒப்பிடல் மற்றும் வேறுபாடுகள் காணப்படுமாயின் அவை தொடர்பில் உரிய நடவடிக்கை எடுத்தல் ஆகியவற்றுக்காக நியாயமான உறுதிப்பாடொன்றை பெற்றுக்கொள்ள போதியளவான ‘‘சிறப்பான முறையில் திட்டமிடப்பட்ட’’ உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு கட்டமைப்பொன்றினை நிறுவனத்தினால் நடாத்திச் செல்லப்படல் அவசியமானதாகும். பொதுப் பேரேடு, குறிப்பேடு, குறிப்பேட்டு உறுதிச்சீட்டுக்கள், கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் போன்ற பிரதான கணக்கீட்டு அறிக்கைகளை பேணிச் செல்லல் தொடர்பிலான கணக்காய்வு அவதானிப்புக்கள் பின்வரும் தலைப்புக்களின் கீழ் உள்ளடக்கப்பட்டுள்ளது.

### 1.5.2 கணக்கீட்டு குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசு |
| --- | --- | --- |
| மூன்று மாதங்களுக்கு ஒரு தடவை புதுப்பிக்கும் அடிப்படையில் 2015 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளின் போது நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டிருந்த ரூபா 27 மில்லியன் கூட்டுத்தொகைக்கு உரியதாக 2019 திசெம்பர் 31 ஆந் திகதிக்கு பெறவேண்டிய வட்டியை இனங்கண்டு கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை. | குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பில் இணங்குகின்றேன். எதிர்காலத்தில் இவ்வாறான குறைபாடுகள் ஏற்படாதிருப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்கின்றேன். | பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைக்கு இணங்க செயற்பட வேண்டும். |

### 1.5.3 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டு கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசு |
| --- | --- | --- |
| நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 04 கணக்கு விடயங்களுக்கு உரியதாக 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் நிலவிய மீதிகள் மற்றும் அத்திகதியில் உள்ளபடியான பேரேட்டுக் கணக்குகளில் நிலவிய மீதிகள் ஆகியவற்றுக்கிடையே ரூபா 9,690,015 ஆன இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன. | குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பில் இணங்குகின்றேன். எதிர்காலத்தில் இவ்வாறான குறைபாடுகள் ஏற்படாதிருப்பதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்கின்றேன். | நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டுள் பெறுமதிகள் மற்றும் மூலஆவணங்கள் ஆகியவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள பெறுமதிகள் ஒன்றுக்கொன்று இணங்கும் வகையில் கணக்குகளை பேண வேண்டும். |

### 1.5.4 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசு |
| --- | --- | --- |
| ஊக்குவிப்பு நிதியத்தின் கட்டுப்பாட்டுச் சபை நிதியத்தின் ஆரம்பம் முதல் படிகளைப் பெற்றுக்கொண்டிருந்த போதிலும், அதற்காக சட்டரீதியான அங்கீகாரம் கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்டிருக்கவில்லை. | படிகளாக கட்டுப்பாட்டுச் சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. | கட்டுப்பாட்டுச் சபையின் அங்கத்தவர்களின் நியமனக் கடிதங்கள் உரிய முறையில் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

1.6 **சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் முதலியவற்றுடன் இணக்கமின்மைகள்.**

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | சிபாரிசு |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 387 | காசோலைகள் மூலம் மேற்கொள்ளப்படும் அனைத்து கொடுப்பனவுகளுக்காகவும் நிலவும் வங்கி மீதியானது போதுமானதென கொடுப்பனவு உத்தியோகத்தரால் திருப்திகொள்ள வேண்டும். எவ்வாறெனினும், நிதியத்திற்கான வங்கி நடைமுறைக் கணக்கில் நிலவும் பணமீதியினை விஞ்சி காசோலைகள் வரைவதற்காக 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக காசுப்புத்தகத்தின் மீதியானது ரூபா 179,777 ஆன செலவின மீதியொன்றினை கொண்டிருந்தது. | எதிர்காலத்தில் இவ்வாறான குறைபாடுகள் ஏற்படாதிருக்கும் விதத்தில் செயற்படுவதற்கு உத்தியோகத்தர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. | சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | PF/423 ஆம் இலக்க மற்றும் 2006 திசெம்பர் 22 ஆந் திகதிய அரச நிதி சுற்றறிக்கையின் 3.2(ஆ) பந்தி | 2019 திசெம்பர் 31 ஆந் திகதி ரூபா 38,335,003 தொகையான திறைசேரி உண்டியல்கள் மற்றும் நிலையான வைப்புக்களின் பெறுமதிகள் திறந்த நிதியத்திற்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், சேமிப்பு வைப்புக் கணக்கில் ரூபா 22 மில்லியன் முதல் 58 மில்லியன் வரையான வீச்சில் மிகையொன்று காணப்பட்ட போதிலும், அந்த மீதியை திறந்த நிதியத்திற்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அமைச்சரின் கட்டளையின் பிரகாரம் திறந்த நிதியத்திலிருந்து 05 சதவீதம் நிதியத்தில் நிறுத்தி வைக்கப்பட வேண்டும். அவை வைப்புக் கணக்கிற்கு மாற்றப்பட்டு முதலீடு செய்யப்படும். | சுற்றறிக்கையின் பிரகாரம் மிகைப் பணமானது காணப்படுமாயின் அது திறந்த நிதியத்திற்கு செலவு வைப்பதற்கு உள்ள இயலுமை தொடர்பில் தேடிக் கண்டறிந்து அதற்கமைய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாடுகளின் பெறுபேறானது ரூபா 5,082,958 ஆன மிகையாக இருந்ததுடன் அதனோடொத்த கடந்த வருடத்தின் மிகையானது ரூபா 3,269,741 ஆகும். அதன் பிரகாரம் நிதிவிளைவில் ரூபா 1,813,217 ஆன அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. வருடாந்த வருமானம் ரூபா 11,352,744 இல் இனால் குறைவடைந்திருந்த போதிலும், அதனையும் விட அதிக சதவீதத்தினால் செயற்பாட்டு செலவினமானது ரூபா 12,715,279 இனால் குறைவடைந்திருந்தமை இந்த அதிகரிப்பிற்கு பிரதான காரணமாக அமைந்திருந்தன.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசு |
| --- | --- | --- |
| 2011 இன் 04 ஆம் இலக்க மோட்டார் வாகன (வெகுமதி நிதியம்) கட்டளை கோவையின் 03(1) கட்டளையின் பிரகாரம் வெகுமதி மற்றும் ஊக்குவிப்புக்கு தகைமையைப் பெறும் 04 செயற்பாடுகள் குறிப்பிடப்பட்டிருந்தது. எனினும், வெகுமதி மற்றும் ஊக்குவிப்பினை செலுத்துவதற்காக ஒதுக்கப்பட்ட தொகையில் 08 சதவீதமானது நிர்வாக செலவினமாக செலுத்தியமை தவிர எஞ்சிய 92 சதவீதம் பதவியணியினரிடையே ஊக்குவிப்பாக பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தது. எவ்வாறெனினும், கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவாறு வெகுமதிகளை செலுத்தும் வேலைத்திட்டமொன்று இடம்பெறுமாயின் தவறான முறையில் மேற்கொள்ளப்படும் வாகன திருத்தங்கள், வாகங்களுக்கு மேற்கொள்ளப்படும் மாற்றங்கள் போன்றவற்றை வெளிப்படுத்திக் கொள்வதற்கு இயலுமையொன்று நிலவியமை அவதானிக்கப்பட்டது. | | |

| | | |
|---|---|---|
| (அ) மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் நாயகத்தின் அங்கீகாரத்தினை பெற்றிராது ஏதேனுமொன்று மோட்டார் வாகனத்தினை உருவாக்குதல், உற்பத்தி செய்தல், ஒருங்கிணைத்தல், புதிதாக நிர்மாணித்தல், பதிலீடு செய்தல் மற்றும் நிர்மாணத்தினை மாற்றியமைத்தல் ஆகியவற்றில் ஈடுபட்டுள்ள நபர்கள் தொடர்பில் தகவல் வழங்கும் தரப்பினருக்கு பணம் செலுத்துதல்.<br><br>(ஆ) சில போலியான செயற்பாடுகளை இனங்காண்பதற்கான தகவல்களை வழங்கும் அவ்வாறான போலியான செயற்பாடுகளை வெளிப்படுத்திக் கொள்வதற்கு அதில் ஈடுபட்டுள்ள நபர்களுக்கு வெகுமதி செலுத்துதல்.<br><br>(இ) வரவேற்கத்தக்க அல்லது விசேட மதிப்பீட்டிற்குரிய வகையில் திணைக்களத்தின் பதவியணியின் செயற்பாடுகளுக்காக வருடமொன்றிற்கு ரூபா 50,000 இனை மிஞ்சாத வகையில் பணம் செலுத்துதல். | அவதானிப்புக்களுடன் இணங்குகின்றேன். | நிதியத்தின் அடிப்படை நோக்கங்கள் தொடர்பில் கூடிய கவனம் செலுத்த வேண்டும் என்பது. |

**3.2 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசு |
|---|---|---|
| ஊக்குவிப்பு கொடுப்பனவுகளுக்காக நிதியத்தில் சேர்த்து வைக்கப்பட்டிருந்த மூலஆவணங்கள் மோட்டார் வாகன அதிகாரச்சட்டத்தின் 213 ஈ (2) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், | 2019 ஆம் ஆண்டு முதல் ஊக்குவிப்பு கொடுப்பனவுகளை செலுத்துவதற்கு வைப்புக்களின் அடிப்படையில் சேகரிக்கப்பட்ட வட்டி பயன்படுத்தப்படவில்லை. | நிலவும் சட்டங்கள், விதிகளுக்கு அமைய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

அதற்கு முரணாக மீளாய்வாண்டினுள் வைப்புக்களின் மீது சேகரிக்கப்பட்ட வட்டி பணமான ரூபா 7,272,842 தொகை ஊக்குவிப்பு கொடுப்பனவுகளைசெலுத்துவதற்காக பயன்படுத்தப்பட்டிருந்தது.

## 4. கணக்களிதகைமையும் நல்லாளுகையும்

### 4.1 வருடாந்த செயல்நடவடிக்கை திட்டம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசு |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருந்தது. எனினும், 2011 இன் 04 ஆம் இலக்க மோட்டார் வாகன (வெகுமதி ஊக்குவிப்பு கொடுப்பனவு நிதியம்) கட்டளைக் கொள்கையின் பிரகாரம் மோட்டார் வாகனங்களை போலியாக தயாரித்தல் அல்லது மாற்றியமைத்தல் போன்றவை தொடர்பான தகவல்களை வழங்கும் தரப்பினருக்கு பணப்பரிசில்களை செலுத்துதல் தொடர்பில் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | அவதானிப்புக்களுடன் இணங்குகின்றேன். | நோக்கங்களினை முன்னுரிமையாக் கொண்டு செயற்படும் விதத்தில் திட்டத்தினை தயாரிக்க வேண்டியமை. |

### 4.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசு |
|---|---|---|---|
| (அ) | கடந்த 02 வருடங்களில் நிர்வாக செலவினங்கள் முறையே ரூபா 447,000 மற்றும் ரூபா 562,000 ஆகியவற்றுக்கு இடைப்பட்ட வீச்சினை கொண்டிருந்த போதிலும், 2019 ஆம் ஆண்டின் நிர்வாகச் செலவினம் ரூபா 1,157,000 ஆக மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. இதன்காரணமாக மேற்கொள்ளப்பட்டிருந்த மிகை ஒதுக்கங்கள் மதிப்பிடப்பட்ட பெறுமதிக்கு ஒப்பாக 57 சதவீத அளவினைக் கொண்டிருந்தது. | அவதானிப்புக்களுடன் இணங்குகின்றேன். | நடைமுறைச் சாத்தியமாக பாதீட்டு இலக்கங்களினை தீர்மானித்தல். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | விளையாட்டுக்கள் மற்றும் ஊக்குவிக்கப்பட வேண்டிய மதிப்பீடுகளுக்காக வருடாந்த பாதீட்டு மூலம் ரூபா 100,000 ஆன ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், அவ்வாறான செலவினங்கள் எதுவும் ஆண்டினுள் இடம்பெற்றிருக்கவில்லை. அத்துடன் ஊக்குவிப்பு கொடுப்பனவுகளை வழங்கும் முக்கிய நோக்கமான வெகுமதிகளை வழங்குவதற்காக மீளாய்வாண்டினுள் எந்தவொரு ஒதுக்கமும் இடம்பெற்றிருக்கவில்லை. | அவதானிப்புக்களுடன் இணங்குகின்றேன். | நடைமுறைச் சாத்தியமாக பாதீட்டு இலக்கங்களினை தீர்மானித்தல். |
| (இ) | சரியான மதிப்பீடுகளை தயாரிக்ககூடிய வங்கி வைப்பு வட்டி மற்றும் நிலையான வைப்பு வட்டி ஆகியவற்றுக்கு முறையே 92 சதவீதம் மற்றும் 45 சதவீதம் குறைவாக மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருந்தது. | அவதானிப்புக்களுடன் இணங்குகின்றேன். | நடைமுறைச் சாத்தியமாக பாதீட்டு இலக்கங்களினை தீர்மானித்தல். |